உ

கடவுள் துணை.

கள்ளுகடை சிந்து என்னும்

குடியர்கள் சிந்து.

புகையிலைச்சிந்து.



இவை-சிறுமணவூர்,
முனிசாமிமுதலியா ரவர்களாலும்,
செ. ஏகாம்பரமுதலியா ரவர்களாலும்
இயற்றப்பட்டு,

ஆதிபுரி
இரத்தினவேலு முதலியாரது
வாணீவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1911.

சென்னை நாராயணமுதலி வீதி
52-வது நெ. வீடு.

உ

கடவுள் துணை.

கள்ளுக்கடைச் சிந்து.

விருத்தம்.

நம்பினோர் யிருந்தகள்ளே நாடியே அறிந்தகள்ளே
தம்பியுந்தகப்பன்பாட்டன் தலம்பரைகண்டகள்ளே
வம்புசெய்தாய்கள்ளே சோறுபோல்கொதிக்குங்கள்ளே
சொம்புபோலகுடுவைகள்ளே சோறுபோல்கொதிக்குங்கள்ளே
தங்கம்போனகள்ளே தயிரியங்கொடுக்குங்கள்ளே
எங்களைவளர்க்குங்கள்ளே எங்கேபோயொளித்தாய்கள்ளே
சிங்கம்போலெகுருங்கள்ளே ஜெயிலுக்குமனுப்புங்கள்ளே
பொங்கியேவழியுங்கள்ளே புரப்பட்டுவருவாய்கள்ளே

ஆனந்தக்களிப்பு.

ஜாடியே உனக்கொரு கும்பிடு - அந்தசாராயங் குடித்தாக்கால் பேதியெடுக்குது-புட்டியே உனக்கொரு கும்பிடு-அந்த பீரைக்குடித் தாக்கால் சோரைக்கெடுக்குது-கள்ளே உனக்கொரு கும்பிடு - அந்த கெஞ்சா வடித்தாக்கால் நெஞ்சைவுலத்துது, மரமே உனக்கொரு கும்பிடு - அந்த மதத்தை யிழுத்தாக்கால பலத்தைக் குரைக்குது-எப்போ வருவாயோ கள்ளே-உனக்கு இது ஞாயமல்லநீ யெழுந்து வா கள்ளே.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வந்துதேகள்ளு ஈஸ்வரன்போலே
வந்துதே கள்ளு.

அநுபல்லவி.

வந்துதேபார்கள்ளு வாகனங்கருவாடு
நொந்துயிருந்தபேரை நெட்டித்தள்ளிகொண்டு

சரணங்கள்.

ஆதிவிலைகளெல்லாம் அடிமாண்டுபோச்சுது
அஞ்சணா ஆணு வழியொன்றுஆச்சுது

சோதியதன்சுருக்கும் சூரியனுக்குமேது
சுள்ளை கடித்துக்கொண்டு உள்ளுக்குகள்விட்டால் வந்

எழும்புதேபோதை—தலைக்கு மேல்தூக்கி
கடிக்குதேபல்லை

ஆரானுபோனாலும் ஆட்டுமயிர்போச்சி
அதுகுடிக்கும்போதே காட்டுப்புலியும்சீச்சீ
பாரில்பட்டையும்பத்தாய் குழந்தைகுடிக்கும்பாச்சி
பட்டாக்கள்ளுருமூச்சி பாணந்தடுத்துப்போச்சி வந்

ரகுபதிகடைகள்ளு ராவெல்லாங்கொடையுது
ரவுண்டுடானுகள்ளு பாடுது ஆடுது
பாழுஞ்சுடுகாட்டுகள்ளு தலைகீழாய்துள்ளுது
இதுவென்னகள்ளு—பலவைதொட்டிகள்ளு
ஒழுகுதோசொள்ளு

பெண்சாதியைபார்த்தாக்கால் பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைநயினுவென்று சொல்லையிலடிக்குது
தன்பேச்சிபோல்வந்தால் தட்டிகொடுக்குது
தடுத்துசொன்னால்பல்லை கடித்துமுடுக்குது
யெடுக்குதேகிறுக்கு—நாலுபேர்பிடித்தாலும்
யிழுக்குதே மொரப்பு

செஞ்சி ஏகாம்பரமுதலியாரா லியற்றிய

குடியர் அலங்காரம்.

வெண்பா.

காலைக்குடியரெல்லாம் கவைக்குதவார்கள் குடிப்பார்
வேலைக்குப்போகார் வெறியனைப்போ—லலைவார்
வெறுமைவந்தபோது வேலைக்குப்போவார்
தருமமோ குடியர்க்குந்தான்.

புருஷன்சொல்-சிந்து.

முக்கிமுக்கிகஷ்டப்பட்டு கேளடி பெண்ணே
மூணுபணங்கொண்டுவந்தேன் பாரடி கண்ணே
பகுவமாய்செலவு பண்ணடி பெண்ணே
பாட்டாக்கள்ளுக்கொருபணந் தாக்கடி கண்ணே

பெண்சொல்லல்.

கள்ளை மறந்திடடா குடிகார பாவி
காலையில்குடியாதடா சதிகார பாவி
பிள்ளைகுட்டிபெற்றாயோடா சண்டாள பாவி
இன்னம்புத்தியில்லையோடா குடிகார பாவி

புரு. சேனநாள்பழக்கமடி முட்டாளே பெண்ணே
ஜென்மத்திலேயூறிபோச்சி கெட்டேண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தனென்று எண்ணாதே பெண்ணே
நாலுமூனுதலைம்பரையாய் நடக்குது கண்ணே

பெ. குடிக்கேனென்றுசத்தியங்கள் பண்ணினையே பாவி
குடல்பழுத்ததென்று கதைசொன்னையே பாவி
ஜாடிகள்ளுஉன்குலைக்கு போதாதோ பாவி
சாப்பிட்டாலும்வீண்சண்டைகள் செய்யாதே பாவி

புரு. மனவருத்தப்படுவதாலே கேளடி பெண்ணே
மாஜினமாகிலும் தின்னுவாரண்டி கண்ணே
ஜனனுமென்றுபேசாதடி முட்டாளே பெண்ணே
துட்டுகூடகுறஞ்சிபோச்சி தூக்குது கண்ணே

பெ. பணம்போனாலும்போகுதையா எந்தன் கணவா
பங்கியுண்டைபழக்கவேண்டாம் எந்தன் கணவா
ஞானத்தின்படிநடப்பேனையா எந்தன் கணவா
கும்மாமட்டுங்கொடுக்கவேண்டாம் எந்தன் கணவா

புரு. கும்மாவுனக்கொடுப்பதில்லை கேளடி பெண்ணே
குடிக்கமட்டுமொத்தைபணம் தாக்கடி கண்ணே
சும்மாசும்மாசொன்னேனென்று எண்ணாதே பெண்ணே
சோத்துபானையெகிரிபூடுந் தவறினால் கண்ணே

பெ. சோத்துப்பானையெகிரிபோனால் கேளடா பாவி
உன்கூத்துதாண்டா காஞ்சிபோகும் குடிகார பாவி
சேத்துசொன்னசத்தியத்தை மறந்தாயே பாவி
நெஞ்சிமட்டும்கெட்டிவிட்டு வந்தாயே பாவி

புரு. குடியருக்குசத்தியங்க ளேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம் கேளடி கண்ணே
படியடித்தும்போதைகொஞ்சம் காணண்டி பெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்து வருவேண்டி கண்ணே

பெ. பட்டைமூஞ்சிபொடிவிழுக குடிகார பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால் மோசண்டா பாவி
கஷ்டப்பட்டுபணத்தைவீணாய் அழிக்காதே பாவி
காலங்கருப்யானதினால் சொன்னண்டா பாவி

புரு. பணம்போனாலும்சட்டம்போச்சி கேளடி பெண்ணே
பாட்டாயடித்தால்கையுங்காலு முறைக்குது கண்ணே
கணக்குப்பார்த்துகுடிக்காவிட்டால் கேளடி பெண்ணே
காலணாகையில்கூட கிட்டாது கண்ணே

பெ. ஓயாகுடிகுடியாதே சண்டாளப் பாவி
உத்தியோகத்தில்மண்ணுவிழுங் குடிக்கார பாவி
ஏழைவயர்பெறியபெறிய சதிகாரப் பாவி
எப்படியும்நாசமாவாய் குடிகாரப் பாவி

புரு. உத்தியோகம்போனாலென்தன் சட்டம்போச் சடி
ஊரொடணையில்லாவிட்டால் வெறியும் ஏதடி
எத்தனைபேர்யோளாளிகள் ஊரில் பாரடி
எவனாகிலுங்கொடுத்துப்போவான் உனக்குபெண் ணடி

பெ. பஞ்சைபோலகற்றகல்வி படிக்காதே பாவி
பாரிலுள்ளோரெல்லாமுன்போல் குடித்தாரே பாவி.
செஞ்சியேகாம்பரங்கவியை கேளடா பாவி
சிரிக்குதுலகமெல்லாங் குடிக்காதே பாவி

விருத்தம்.

பெருமானே தரிசனமே சொல்லக்கேளாய்
பேறானபச்சைமுளா வுப்புங்கூட்டி
காடானநாக்கின் நுனியில்வைத்து
கள்ளதனைப் படியிலூர் நுரையைத்தள்ளி
அரகராவென்றுள்ளே செலுத்திவிட்டால்
ஆதிசிவன் ஆயன்மாவும் எதிரேநிற்பார்
பிரியமாய் மதுசெய்யும் மருத்துவத்தை
பரிக்ஷித்துக் கொண்டவற்கு மோக்ஷந்தானே.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

சாதுகளைக்கெடுக்குதையா பாழுங்கள்ளுயிது
சாப்பிட்டால்மொரைக்குதையா பாழுங்கள்ளுயிது

அநுபல்லவி.

சாதுகளைக்கெடுக்குது சாப்பிட்டால்வெரிக்குது
பாதைபடுத்துது பவுசைக்கெடுக்குது சாது

சரணங்கள்.

பிரியமாயழைக்குதையா பாழுங்கள்ளுயிது
படிவாங்கிகெட்டுதையா பாழுங்கள்ளுயிது
பிரியமாயழைத்து படிவாங்கிகெட்டுது
வெரிகொடுத்தாட்டுது வெளியேகெட்டிதள்ளுது சாது

கண்டவரைகூட்டுதையா இந்தகள்ளு
கடன்வாங்கசெய்யுதையா இந்தகள்ளு

கண்டவரைகூட்டுது கடைகடைக்கு ஓடுது
சண்டையைவலிக்குது தெண்டங்கொடுக்குது சாது

காலையிலழைக்குதையா தலைநோவுகள்ளு
காட்புகட்டிதிரிகுதையா தலைநோவுகள்ளு

காலையிலழைக்குது கடையில்குந்தவைக்குது
வேலையைகெடுக்குது வீண்சண்டைபோகுது சாது

காசியிருந்தாலழைக்குதையா பாழுங்கள்ளுயிது
கடன்கேட்டால்முறைக்குதையா பாழுங்கள்ளுயிது

காசியிருந்தாலழைக்குது சடன்கேட்டால்மொறைக்குது
மோசப்படுத்துது மூலையிலேவொறங்குது சாது

ஓரக்கங்கொடுக்குதையா கள்ளுயில்லாவிட்டால்
உட்கார்ந்துறங்குதையா அதுஊமையைப்போல்

ஓரக்கங்கொடுக்குது ஒருபடியும்பறக்குது
வெறியெடுத்தால் என்னையும்படிக்குது சாது

வஞ்சனையாய்சொல்லவில்லை யிந்தகள்ளைநான்
வழக்கத்தைசொன்னேனையா யிந்தமதுவைநான்

வஞ்சனையாமிதைவிட்டு வுட்படுவாய்புவிமீது
செஞ்சியேகாம்பரங்கவியை சித்தத்திலேநிதம்பாடு சாது

வேறுமெட்டு.

ஓகநெலகா படிணபாடு ஊராங்கா அடிகிருடு ஜாடியே கள்ளு ஜாடியே, பிருபுட்டி செய்தமோசம் பீப்பாத்தண்ணியைக் கேட்டு பாரு ஜாடியே கள்ளுஜாடியே, போசேடஞ்புடு சுறுக்குண்டாதி பொயினவதலா ஏமிலேது புட்டியே கள்ளுஜாடியே, பட்டைத் தண்ணியை நம்பிநம்பி சொட்டுமூத்திரங் கூடகாணேம் புட்டியே கள்ளுஜாடியே கள்ளுவொச்சினமாடவினி காலிவாளுயயப்படிந்தி காவடியே கள்ளுகாவடியே, இத்தனைநாள் பட்டபாடு ஆரைக்கேட்டால் தெரிய போகுது குடுவையே, சிறுமணவூர்முனிசாமி செப்பிசெய்பி நவ்வினுடு மொந்தையே கள்ளுமொந்தையே.

கரமாயிபோச்சி புகயிலையப்பியாசத்தை
கற்றவர்பேச்சி

அநுபல்லவி.

வரியதிகமாச்சி வாடுங்குடிகள்பேச்சு
பிரியமாய்சுருட்டு பொடியுங்கருப்பாச்சு

சரணங்கள்.

கட்டென்றுபொடிகேட்டால் காதைமூடிக்குது
கட்டும்பொடியானாலும் துட்டுக்குழபர்ந்தது
பட்டணத்திற்புகலை பாழாய்ப்போச்சுது
பந்தர்புகலைபேச்சி அந்தரமபரக்குது கா

துட்டுக்கொருகாண்டி சிட்டிக்கைபொடியாச்சி
தொல்லையாம்புகலைக்கி யல்லோர்பரக்கலாச்சி
மட்டிபுகலைநேயம் கற்றதேபகையாச்சி
மறந்துவிப்போமென்றால் மணமுங்கலங்கலாச்சி கா

புகலையின்பேச்சு காலணுகொடுத்தாலும்
ஒருயிலையாச்சி

கள்ளுக்கடைசுருட்டு நடையாய்பறந்துபோச்சி
காம்புக்குவிலைமிஞ்சி கருப்பாய்பறக்கலாச்சி
தள்ளிவைத்தபுகயிலை தங்கங்குவிக்கலாச்சி
தம்பிடிக்குஒரு சுருட்டுஞ்சின்னதாச்சி கா

ஓயாமல்சுருட்டு பிடிப்போர்உறங்கலாச்சி
உதவாதகோர்வையும் பதமாய்ஒத்துப்போச்சி
வாயிலடக்குவோர்க்கு வயறுமயெரிந்துபோச்சி
வாட்டமாய்பத்தெடம் பார்த்தவர்கள்பேச்சி கா

கருவலாய்ப்போச்சி கெஞ்சாயிழுப்போர்கள்
கலங்கிடலாச்சி

ஆமூர்புகலைபேச்சி அதிகாரம்பெரிதாச்சி
அதற்குமுன்கோருவை பாய்ந்துயெரலாச்சி
ஊத்தங்கரைபுகலை கார்த்ததேவிலையாச்சி
உள்ளூர்புகலையெல்லாம் நல்லவிலையாச்சி கா

பந்தரின்புகலை சொன்னதுசொன்னவிலை
துள்ளுதேமேலே

அஞ்சாமல்புகலைக்கு அதிகாரம்பெரிதாச்சு
அவனியிலதுசேஷ்டை அடக்கினால்சுகமாச்சி
செஞ்சியேகாம்பரங் கவியாயெழுதலாச்சி
சீமையிலுள்ளோர்கள் பார்த்துமகிழலாச்சி கா

ஆனந்தக்களிப்பு.

பரிபூரணானந்தபோதம் நேற்று
பகலெல்லாமழைபெய்து சுனரெல்லாம்வோதம்

சாராயபுட்டியைநம்பு அதை
சாப்பிட்டால்கொடுக்குதே அளவற்றதெம்பு
கையிக்கிசெலவில்லைகொம்பு யாரை
கண்டகுத்தினால் கயளுதேகிகம்பு தரு

பெற்றதாயார்சொல்லைக்கேளா-உந்தன்
பெண்டாண்டிபிள்ளைக்கி கஞ்சிவார்க்காதே
உற்றாரைஊரிலே சேர்க்காதே-உந்தன்
ஆயுசுக்குமொருகாசு தருமஞ்செய்யாதே தரு

பெற்றதாயாரைத் தடிகொண்டோட்டு
தகப்பனையும்பாட்டனையும் வீட்டைவிட்டோட்டு
உற்றாரையுரவாரைமாட்டு-இந்த
ஊரிலுள்ளோர்மேல் கச்சையுங்கட்டு தரு

தருமஞ்செய்யாதிருமனமே-நானே
கருமத்தைசெய்தாலே கடைத்தேறலாமே

கள்ளுகடைச்சிந்து.

முற்றிற்று.